1974 சனவரி 23]

Washermen Co-operative Societies.

* 44. Q.—Thiru C. R. KOLAPPA: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether the Government will take steps to amalgamate all the Washermen Co-operative Societies in various districts into one federation?

சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

திரு. சி. ஆர். கோலப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பல மாவட்டங்களிலுள்ள சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து பெடரேஷனை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

திரு. சி. ஆர். கோலப்பா: தலைவரவர்களே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இதனால் எந்த விதமான பலனும் கிடைக்கவில்லை என்று சலவைத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள். இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. கேட்டிருக்கிற கேள்வி மாநில அளவிலே ஒரே சங்கமாக அமைக்க முடியுமா என்று இருக்கிறது. தேவையில்லை என்பதற்காகத்தான் தேவையில்லை என்று சொன்னேன். இப்போது கிட்டத்தட்ட 17 சங்கங்கள் இருக்கின்றன. அவைகளிலே அனேகமாக எல்லாம் நட்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. ஆகையினாலே நிர்வாகஸ்தர்கள் நல்ல முறையில் நடத்துவதற்கு என்னென்ன உதவிகளைக் கேட்கிறார்களோ அவைகளைச் செய்வதற்கு சர்க்கார் காத்துக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 4-50)

திரு. சி. ஆர். கோலப்பா: தலைவரவர்களே, பிற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுத் தலைவர்களும் மாவட்ட ரெஜிஸ்ட்ரார்களும், இதை ஒரு ஃபெடரேஷனை மாற்றியமைத்தால், நல்ல முறையில் இது செயல்படும் என்று அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார்கள். அதைச் செயல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இருக்கும் கிளைச் சங்கங்கள் எல்லாம் நட்டத்தில் ஓடுகின்றன என்று சொல்லுகிறேன். இதை மீண்டும் ஒரு மாநில அமைப்பாக மாற்றி, அதற்கு என ஒரு அதிகாரி,

[1974 சனவரி 23

பிறகு ஒரு தலைமை அதிகாரி என்று ஆயிரம் ஆயிரத்தைந்நூறு என்று செலவிடுவதைவிட அந்தப் பணத்தைக் கிளைச் சங்கங்களுக்கு உதவியாக அளித்தாலும் ஏதாவது பலன் ஏற்படும். ஆகவே மாநில அளவில் ஒரு பெரிய சங்கமாக மாற்றியமைப்பதற்கான குறிப்பு ஏதும் இல்லை.

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் நட்டத்தில் நடப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி நட்டத்தில் அவை நடக்கின்றன என்றால், அதற்கான காரணங்கள் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஒவ்வொரு சங்கமாக ஆய்வுசெய்து பார்த்தால்தான் காரணம் தெரியும். ஆகவே சங்கத்திற்குப் பொறுப்பாக உள்ள இயக்குநர்களும், தலைவர்களும் திறம்பட அவற்றை நடத்த முயல வேண்டும். வினோபா நகர் கூட்டுறவுச் சலவைசாலை ஒன்றுதான் லாபத்தில் நடைபெறுகின்றது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இந்தச் சங்கங்கள் சலவையாளர்களுக்கு என்னென்ன விதத்தில் உதவியாக இருக்கின்றன? அவர்களுக்கு வேண்டிய முக்கிய பொருள்களை சற்று விலை குறைவாக அவர்களுக்கு வாங்கித் தருகின்றார்களா? அப்படிச் செய்தால், அதனால் நட்டம் ஏற்பட வேண்டிய நியாயம் இல்லை. ஆகவே அந்தச் சங்கங்களிலே அவர்கள் என்ன செய்கின்றார்கள்? ஏன் நட்டம் வரவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்தச் சங்கங்களிலே சலவையாளர்களுக்கு ரூபாய் 200 கடனாகத் தருகின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய சலவைப் பெட்டி, மேஜை போன்றவற்றை வாங்குவதற்கு என்று தருகின்றார்கள். இதை அவர்கள் முப்பது மாதங்களில் திருப்பிக் கட்டிவிட வேண்டும். அடுத்து சங்க உறுப்பினர்களுக்கு வெளி மார்க்கெட்டில் கிலோ ரூபாய் 1.80-க்கு விற்கும் சலவைச் சோடா உப்பை ரூபாய் 1.20 கிலோ என்ற அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்கின்றார்கள்.

திரு. மு. மாசிலாமணி: தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை இணைப்பதன் மூலம் அரசுக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கும் பலன் கிடைக்கும் வகையில் ஆலோசனைகள் கிடைத்தால், அவைகளை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பரிசீலனை செய்யலாம்.

1974 சனவரி 23]

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, இந்தப் பணிகளை சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்கான முறையீடுகள் ஏதேனும் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கேள்வி கேட்டிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் முறையீடுகள் அரசுக்கு வரவில்லை.

திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவரவர்களே, இப்போது இச் சங்கங்களிலே உள்ள நிலையை மாற்றி சலவைத் தொழிலை மின்சாரத்தின் உபயோகத்தாலேயே செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படிச் செய்தால், தொழிலாளர்களுடைய கதி என்னவாகும் என்று எதிர்பார்க்க முடியாது.

Idols Theft.

@ * 13. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether idols of the Arulmigu Abirameswarar Temple at Tiruvamathur near Villupuram were stolen about the 14th February 1973; and

(*b*) if so, the action taken thereon?

சிலைகள் திருட்டு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விழுப்புரத்திற்கு அண்மையில், திருவாமாத்தூரிலுள்ள அருள்மிகு அபிராமேஸ்வரர் கோயிலின் சுவாமி சிலைகள் 1973 பிப்ரவரி 14-ஆம் நாள் அளவில் திருடு போய்விட்டனவா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

@ 19—1—1974-ம் தேதி வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது